



# அவதாரிகை

ये यथा मां प्रपध्यन्थे तांस्तथैव भजाम्याहं |
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याह पार्थ सर्वसह ||

"ஓ பார்த்த! மக்கள் என்னை எந்த எந்த விதமாக பார்கிரார்களோ, நான் அவர்களுக்கு அந்த அந்த உருவங்களில் காட்சி அளிக்கிறேன்!" என்று கண்ணன் கீதையில் உறுதி அளிக்கிறான். (கீதை 4-11). Parliament of Religionsல் சுவாமி விவேகானந்தர் "Brothers and Sisters of America" என்று கூறி Universality of Religion என்பதை எடுத்து காட்ட, இதற்கு மேல் சிறந்த உதாரணம் இருக்க முடியாது! இறைவனை, பரம்பொருளை, ராமனகவோ, நரசிம்ஹனாகவோ, பரம்சிவனாகவோ ஏன் அல்லாவாகவோ கிருஸ்துவாகவோ பார்த்தாலும், எல்லாம் ஒன்றே என்று கண்ணன் இந்த ஸ்லோகத்தில் எடுத்து உரைக்கிறான்.

இறை சிந்தனையை நடைமுறை ஆக்கிய ஞானிகளில் சென்ற நூற்றான்றண்டில் சிறந்து விளங்கிய பிரம்ம ஸ்ரீ அனந்த ராம தீட்சிதர் ஒரு கதை சொல்லுவர்: குருவாயூரப்பன் சந்நிதியில், வழிமுறை கோட்பாடுகளை அறியாத ஒரு பக்தன் நம்பூதரியை அணுகி, "சுவாமி, எந்த ஒரு விதிமுறையும் அறிவும் இல்லாத அஞ்ஞானி நான். குருவாயூரப்பனை தியானம் செய்ய வேண்டும் என்ற அவா மட்டும் உள்ளது. இதை எப்படி செய்ய வேண்டும் என்று தயவு கூர்ந்து உபதேசிக்க வேண்டும்" எண்டு காலில் விழுந்து கேட்டு கொண்டான். ஆனால், மிக செருக்கு கொண்ட நம்பூதரி அவனை புறக்கணித்து, "போடா போ! உனக்கெல்லாம் சொல்ல எனக்கு நேரம் இல்லை. வேண்டுமானால் இரண்டு கொம்பு இருப்பதாக நினைத்து வழிபடு" என்று கூறி அனுப்பினார். அவர் கூறிய வார்த்தையையே வேத வாக்கு என்று மதித்து அந்த பக்தன் அப்படியே வழிபட ஆரம்பித்தான். அன்று மாலை வீதி புறப்படுக்காக குருவாயூரப்பனின் உத்சவ மூர்த்தியை வெளியே கொண்டு வர யத்தனித்த போது, அந்த பக்தன் பிரார்த்தித்து கொண்டு இருக்கும் போது, அந்த உத்சவ மூர்த்தி வெளியே வர முடியாமல் இருந்தது. ஏதோ முட்டும் சப்தம் கேட்டு கொண்டே இருந்தது. ஆனால் என்ன என்று யாருக்கும் புரிய வில்லை. அந்த பக்தன் மட்டும் "அங்கே கொம்பு முட்டுகிறதே – பார்த்து கொண்டு வாருங்கள்" என்று சொன்ன போதுதான் நம்பூதிரிக்கு தான் செய்த தவறு உரைத்தது. உடனே, அந்த





பக்தனை அழைத்து இறைவனின் உண்மை ஸ்வரூபத்தை “சாந்தா காரம் புஜகசயனம் ...” என்ற சுலோகத்திற்கு ஏற்ப எடுத்து உரைக்க, அந்த பக்தனும் அவ்வாறே பிரார்த்திக்க, தடங்கல் இன்றி, உற்சவர் வெளியே வந்தார்.

இந்த கட்டுரைகளில், எனக்கு தெரிந்த இரண்டு subjects ஆன management and technology மூலம் நமது புராணங்களிலும் இதிகாசங்களிலும் இருக்கும் புதையல் களஞ்சியத்தை explore செய்திருக்கிறேன். தெரியாத விஷயங்களை, தெரிந்த விஷயங்கள் மூலம் ”by analogy” அறியலாம் அல்லவா? இதே போல், எல்லை இல்லா தாத்பரியங்களை, என் மூளைக்கு எட்டிய வழிகளில், மனதுக்கு புரியும் வழிகளில் எழுதி, ஆத்ம உணர்வை அடைய செய்த சிறு முயற்சியே இக்கட்டுரைகள். இந்த முயற்சியில் வெற்றி பெற, “மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசார்ய தேவோ பவ, அதிதி தேவோ பவ” என்று பிரார்த்தித்து, இந்த பாதையை தொடங்குகிறேன்.

ஓம் சாந்தி!